

தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION



# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY


| கதிர் 51 | பாரிப்பு 7 | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மார்ச் 2020 |
| --- | --- | --- | --- |
| KADHIR 51 | PAARIPPU 7 | THIRUVALLUVAR AANDU 2050 | MARCH 2020 |





**15-02-2020 அன்று சென்னையில் நடந்த தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்களின் முத்துவிழா மற்றும் மலர் வெளியீட்டு விழா நிகழ்வுகள்**

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.


Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

15.02.2020 அன்று சென்னையில் நடந்த தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்களின் முத்துவிழா மற்றும் மலர் வெளியீட்டு விழா நிகழ்வுகள்




தமிழ்நாடு பொறியியல் சங்கம் தர்மபுரி கிளையின் முன்னாள் செயலாளர் பொறியாளர் எம்.பாலகிருஷ்ணன் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு கிளைச்சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**பொதுச் செயலாளர் மடல்**

மடல் - 7 (2019 - 2020)



# தொடரும்
# நம் பயணம் ........

## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்கு 12.02.2020 அன்று தலைமை நீதிபதி அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. Advocate General அவர்கள் துறையில் நிறைய பணிகள் நடைபெற்று வருவதாகவும், சுமார் 480 உதவிசெயற்பொறியாளர் பதவிகள் காலியாக உள்ளதாகவும் கூறி தமிழ்நாடு அரசு ஊழியர் (Conditions of Service) விதிகள் 2016 பிரிவு 47ன் படி உதவிசெயற்பொறியாளர் பதவிகளை உடனடியாக நிரப்ப நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

15.11.2019 அன்று உயர்நீதிமன்ற அமர்வில் Merit படி முதுநிலை அமைத்து பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ள வழக்கில் எந்த விதமான இடைக்கால ஆணையும் வழங்கப்படவில்லை. எனவே 15.11.2019 அன்று உயர்நீதிமன்ற அமர்வில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புதான் தற்போது அமுலில் உள்ளது. எனவே இந்த தீர்ப்பின்படி "உச்சநீதிமன்ற தீர்ப்பை பொறுத்து பின்பு நிலையை மாற்றிக் கொள்ளலாம்" என்ற நிபந்தனையுடன் (Subject to the outcome of the Apex Court Judgement) உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கலாம் என்று மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் தெரிவித்தார். ஆனால் அரசு தரப்பில் ஆஜரான Advocate General இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

இது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும். மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் மிகவும் சரியான ஒரு தீர்வை சொன்னார். ஆனால் என்ன காரணத்தினாலோ Advocate General அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் கூறியது போல் செய்தால் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் வரப்போவதில்லை. உண்மையில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

வழக்கு 19.02.2020 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது. 19.02.2020 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தது. விசாரணையின் முடிவில் 16.04.2020 வரை காலஅவகாசம் Advocate General கோரினார். ஏனெனில் 15.11.2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அசல் நகல் 16.01.2020 அன்றுதான் அரசுக்கு கிடைக்கப்பெற்றதாகவும் அதிலிருந்து 90 நாட்கள் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்த கால அவகாசம் உள்ளதாக கூறி காலக்கெடு கேட்டார். வழக்கு 16.04.2020 அன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது. மேலும் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்குகளை ஒரு நீதிபதி அடங்கிய நீதிமன்றம் விசாரிக்க ஆணையிட்டார். அதன்படி உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்குகள் தனியாக பிரிக்கப்பட்டு ஒரு நீதிபதி அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் அடுத்தக் கட்ட நடவடிக்கை என்ன என்பதைப் பற்றி மையச்சங்க பொறுப்பாளர்கள் கூட்டத்தில் விவாதித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

சென்னை பொறியியல் இல்லத்தில் மாத வாடகையில் (Monthly Rent) தங்குவதற்கு மாத வாடகை கட்டணமாக ரூபாய் 5000/- (ஐயாயிரம் மட்டும்) என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**- இல்லக்காப்பாளர்**
**தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

# 29.02.2020 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 29.02.2020 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் சங்க அலுவலகத்தில் மாநிலத்தலைவர் பொறியாளர் சு. பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத்தலைவர் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினார். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். மேலும் சங்க வழக்குகள் சம்பந்தமாகவும் விரிவாக பேசினார்.

உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமாக விரிவாக விவாதிக்கப்பட்டது.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

## தீர்மானங்கள்:-

**1. மையச்செயற்குழுக்கூட்டம் ஏப்ரல் மாதத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.**

**2. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமான வழக்குகளில் உள்ள Status quo ஆணையை தளர்த்த இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வில் Modification Petition போடுவது என தீர்மானிக்கப்படுகிறது.**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் புதுக்கோட்டை கிளையின் முன்னாள் பொருளாளர் பொறியாளர் K.வெள்ளிமலை உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது மகன் திருமணத்தை முன்னிட்டு ரூபாய் 3,000/- (மூன்று ஆயிரம் மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

**ABSTRACT**

Rules - Tamil Nadu Engineering Subordinate Service – Posts of Special Grade Draughting Officer, Senior Draughting Officer, Draughting Officer, Junior Draughting Officer and Assistant Draughtsman in Branch I - Engineering Branch – Amendments to the Special Rules - Orders - Issued.

**Public Works (D1) Department**

**G.O.(Ms).No. 69** **Dated: 28.02.2020**

விகாரி, மாசி - 16

திருவள்ளுவர் ஆண்டு 2051

**Read:**

1. G.O.(Ms).No.1389, Public Works Department, dated 07.07.1984.
2. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, letter No.S5(2)/58905/2009,dated 18.03.2016.
3. G.O.(Ms).No.10, Public Works Department, dated 20.01.2017.
4. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, letter No.S5(2)/37885/2015, dated 27.03.2017, 02.01.2018 and 31.01.2019.
5. Government letter No.15194/D1/2015-22, Public Works Department, dated 13.03.2019.
6. From the Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai, D.O.Lr.No.5479/RND-G2/2017, dated 02.04.2019 addressed to the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai.
7. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, letter No.S5(2)/37885/2015, dated 06.05.2019 and 27.05.2019.
8. From the Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai, Lr.No.5479/RND-C3/2017, dated 17.12.2019.

**ORDER:**

In the Government Order first read above, orders were issued that 50% of vacancies in the post of Junior Draughting Officer in Public Works Department shall be filled up by the method of direct recruitment.

2. In the Government Order third read above, orders were issued amending the educational qualification for the posts of Special Grade Draughting Officer, Senior Draughting Officer, Draughting Officer and Junior Draughting Officer.

3. The Engineer-in-Chief (Buildings) Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), Public Works Department, Chennai, in his letters fourth read above has sent proposals to the Government to bring the posts of Junior Draughting Officer and Assistant Draughtsman in Tamil Nadu Engineering Subordinate Service under the purview of Tamil Nadu Public Service Commission. Further, he has requested to issue amendments to the Special Rules for Tamil Nadu Engineering Subordinate Service, to fill up 50% of vacancies in the post of Junior Draughting Officer by direct recruitment and the remaining 50% of vacancies by promotion from certain categories in the Tamil Nadu Engineering Subordinate Service in Public Works Department. In addition, he has further requested to fill up the post of Assistant Draughtsman by direct recruitment through Tamil Nadu Public Service Commission.

4. By accepting the above proposal of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, in the Government letter fifth read above, the views of Tamil Nadu Public Service Commission was requested on the proposed amendment to the Special Rules for Tamil Nadu Engineering Subordinate Service.

5. The Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, in his letters seventh read above has sent another proposal for amending the educational qualification for the posts of Special Grade Draughting Officer, Senior Draughting Officer, Draughting Officer and Junior Draughting Officer, based on the suggestion given during the meeting conducted by the Secretary, Tamil Nadu Public Service Commission on 28.03.2019.

6. The Government have carefully examined the above proposals of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department and the views of the Tamil Nadu Public Service Commission obtained in the letter eighth read above, and decided to accept them. Accordingly, the following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

## NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Subordinate Service (Section 8 in Volume III of the Tamil Nadu Services Manual, 2016):-

## AMENDMENTS

In the said Special Rules, in Part II, under the heading "Branch I – Engineering Branch",-

(1) in rule 2, in sub-rule (a),-

(i) for the entries in column (2) against the entries under category 4(a), "(iii) Junior Draughting Officer" in column (1) thereof, the following entries shall be substituted, namely:-

"(i) by direct recruitment; or

(ii) by promotion from Assistant Draughtsman; or

(iii) by promotion from the category of Work Inspector in Branch XII; or

(iv) by promotion from the category of Irrigation Inspector in Branch III:

Provided that fifty percent (50%) of the substantive vacancies arising in the post of Junior Draughting Officer during a year shall be filled up by direct recruitment through Tamil Nadu Public Service Commission and the remaining fifty percent (50%) of the vacancies shall be filled up by other methods as follows:-

| | |
|---|---|
| (a) by promotion from Assistant Draughtsman | : 40% |
| (b) by promotion from Work Inspector | : 8% |
| (c) by promotion from Irrigation Inspector | : 2% |

Provided further that if, sufficient number of qualified and suitable persons are not available for appointment by any one of the methods mentioned above, the unfilled vacancies shall be filled up by the method of direct recruitment";

(ii) for the entries, in column (2) against the entries under category 6, "Assistant Draughtsman" in column (1) thereof, the following entries shall be substituted, namely:-

"(i) by direct recruitment; or

(ii) by promotion or transfer from any other category; or

(iii) by recruitment by transfer from any other service:

Provided that seventy percent (70%) of the substantive vacancies arising in the post of Assistant Draughtsman during a year shall be filled up by direct recruitment through Tamil Nadu Public Service Commission and the remaining thirty percent (30%) of the vacancies shall be filled up by other methods as follows:-

(a) by promotion or transfer from any category : 20%

(b) by recruitment by transfer from any other service : 10%

Provided further that if sufficient number of qualified and suitable persons are not available for appointment by one of the methods mentioned above, the unfilled vacancies shall be filled up by the method of direct recruitment".

(2) in schedule II, referred to in rule 6, -

(i) for the entries (i) & (ii) in column (2), against the entries "Special Grade Draughting Officer, Senior Draughting Officer, Draughting Officer and Junior Draughting Officer" in column (1) thereof, the following entries shall be substituted, namely:-

"(i) Diploma in Civil Engineering awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu or its equivalent qualification recognized by the Director General of Employment and Training, Government of India or by the All India Council for Technical Education; or

(ii) Diploma Architectural Assistantship awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu or its equivalent qualification recognized by the Director General of Employment and Training, Government of India or by the All India Council for Technical Education";

(ii) after the second proviso in column (2), against the entries "Special Grade Draughting Officer, Senior Draughting Officer, Draughting Officer and Junior Draughting Officer" in column (1) thereof, the following proviso shall be added, namely:-

"Provided also that except Assistant Draughtsman, the persons working as Work Inspector, Irrigation Inspector in Tamil Nadu Engineering Subordinate Service must have rendered service for not less than five years in that respective category.";

(iii) after the entries in column (2), against the entry "Assistant Draughtsman" in column (1) thereof, the following proviso shall be added, namely:-

"Provided that the persons who have been considered for appointment as Assistant Draughtsman by promotion or transfer or recruitment by transfer must have rendered service for not less than five years in a particular service.".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.MANIVASAN**

**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

W.P.Nos.35161, 33373, 34153 of 2019; 36614, 43750 of 2016;
10117, 3617, 8402 of 2017
and
W.A.Nos.82, 95 of 2015

THE HON'BLE CHIEF JUSTICE
and
SUBRAMONIUM PRASAD, J.

(Order of the Court was made by The Hon'ble Chief Justice)

We have heard learned counsel for the parties as well as learned Advocate General.

2. The information tendered to us is that appeals before the Apex Court against the Division Bench judgment of this Court dated 15.11.2019 have still not been heard and have been posted after four weeks vide order dated 03.02.2020, a copy of the order has been perused by us.

3. The aforesaid judgment dated 15.11.2019 has a direct impact on the present set of proceedings and therefore, we had been adjourning time and again to enable the State to either obtain any order from the Apex Court or to proceed with the matter, inasmuch as the issue involves promotion to the post of Assistant Executive Engineers from the respective feeder cadres, where large number of posts are lying vacant.

4. It is the submission of the learned Advocate General that the Public Works Department is suffering on account of non-availability of such promoted Assistant Executive Engineers. He submits that various projects of the Government are being stalled due to non-availability of the officials and consequently, it had become imperative for the Government to take proper steps for promotion, for which a resort was being taken by the Government as per the provisions of Section 47 of Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

5. The challenge put forth is that the State Government could not proceed to achieve indirectly which it had been prohibited by virtue of the judgment dated 15.11.2019 to do directly. Prima facie, that is the moot concern that has been voiced by the petitioners contending that once there is no interim order by the Apex Court, then the promotions can be resorted to in consonance with the judgment dated 15.11.2019 making all such promotions subject to the outcome of the appeals before the Apex Court in order to meet any exigency of promotion.

6. Learned Advocate General requests that the matter may be taken up on Wednesday next to enable him to finally get instructions in the matter from the State Government. We hope and expect that the Government will proceed to act in accordance with law, keeping in view the fact that the judgment dated 15.11.2019 is still in force.

Put up on 19.02.2020.

THE HON'BLE CHIEF JUSTICE
and
SUBRAMONIUM PRASAD, J.
W.P.Nos.35161, 33373, 34153 of 2019; 36614, 43750 of 2016; 10117, 3617, 8402 of 2017 and W.A.Nos.82, 95 of 2015

**W.P.Nos.35161, 34153 and 33373 of 2019, 8402, 10117 and 3617 of 2017 and 36614, 43750 of 2016 and W.A.Nos.95, 82 of 2015 and connected W.M.Ps. & C.M.Ps.**

**THE HON'BLE CHIEF JUSTICE**
**and**
**SUBRAMONIUM PRASAD, J.**

We have heard the learned Advocate General, who had requested for adjournments to enable him to obtain instructions from the Government. The learned Advocate General states that a period of twelve weeks had been enumerated in the judgment of the Division Bench for complying with the directions dated 15.11.2019 issued therein and that period is yet to expire, as the certified copy of the order was received on 28.01.2020.

2.We had been adjourning the matter on earlier occasions, as the learned Advocate General had informed that an S.L.P. had been filed against the Division Bench order. In the wake of these developments, since there is no interim order passed by the Apex Court, it would be, in the interest of justice and in order to maintain equity between the parties, that the State Government does not now undertake any exercise to fill up the posts of Assistant Executive Engineers by taking recourse to Section 47 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, until ordered otherwise.

3.It is further directed that the writ petitions, namely, W.P.Nos.10117 of 2017, 8402 of 2017, 3617 of 2017 and 33373 of 2019, which are Single Judge's matters, would stand de-linked from this bunch and shall be listed before the appropriate roster bench dealing with the petitions, for which the Registrar-Judicial shall obtain appropriate orders.

Put up the matters on 16.04.2020, de-linking the aforesaid writ petitions.

(A.P.S., CJ.) (S.P., J.)
19.02.2020
W.P.No.35161 of 2019, etc.
(batch)

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2020 /நாள் 28.02.2020ன் படி 29.02.2020 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | A. விசுவாமித்திரன் | 03.02.1962 | உதவிப் பொறியாளர் |
| 2. | S. மணிகண்டன் | 08.02.1962 | உதவிப் பொறியாளர் |
| 3. | A. அடைக்கண் | 11.02.1962 | இளநிலைப் பொறியாளர் |
| 4. | S. ஜெயக்குமார் | 19.02.1962 | இளநிலைப் பொறியாளர் |
| 5. | V. வேல்முருகன் | 10.02.1962 | இளநிலைப் பொறியாளர் (மின்) |

**ஒம்/- கு.இராமமூர்த்தி**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம),**
**தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 76 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 28.02.2020)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | V. சண்முகநாதன் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 2. | V. வேலையா | துணை தலைமைப் பொறியாளர் |
| 3. | K. சௌந்தரராஜன் | துணை கண்காணிப்புப் பொறியாளர் |
| 4. | B. பாலசுப்பிரமணியன் | உதவி செயற்பொறியாளர் |
| 5. | N.S. கௌரி சங்கர் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | N. பாஸ்கர் | உதவி செயற்பொறியாளர் |
| 7. | T. பன்னீர்செல்வம் | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. மணிவாசகன்
அரசு முதன்மைச் செயலாளர்

## ABSTRACT

Fundamental Rules - Special Casual Leave - Extending Special Casual Leave to the Government Servants who are undergoing Chemotherapy / Radiotherapy treatment for Cancer - Amendment to Fundamental Rule 85 - Orders - Issued.

**Personnel and Administrative Reforms (FR.II) Department**

**G.O. (Ms). No. 05** **Dated: 06.01.2020**

விகாரி வருடம், மார்கழி - 21
திருவள்ளுவர் ஆண்டு 2050.

**Read:**

G.O. (Ms) No. 89, Personnel and Administrative Reforms (FR-III) Department, dated 16.07.2019.

**ORDER:**

In pursuance to the orders issued in the Government Order read above, the following notification will be published in the Tamil Nadu Government Gazette:-

## NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 read with Article 313 of the Constitution of India and of all other powers hereunto enabling, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Fundamental Rules and the Instructions thereunder.

2. Amendment hereby made shall be deemed to have come into force on the 16th day of July 2019.

## AMENDMENT

In the said Fundamental Rules, in Annexure-VII-Executive Instructions regarding Casual Leave made under ruiling (3) under rule 85, under the heading "II. Special Casual Leave", after rule 13, the following rule shall be added, namely:-

"14. Special casual leave for a period of 10 days shall be granted to a Government Servant, who is undergoing Chemotherapy or Radiotherapy treatment for cancer, every time, starting the day prior to the date of Chemotherapy or Radiotherapy, over and above the other eligible leave to him, subject to the production of Medical Certificate from the Medical Officer in-charge of the medical institution where he has undergone the said treatment"

(BY ORDER OF THE GOVERNOR)

**S. SWARNA**
**SECRETARY TO GOVERNMENT**

## ABSTRACT

Establishment - Water Resources Department - Reformation of Quality Control Divisions under the control of Chief Engineer & Director, Institute for Water Studies, Hydrology & Quality Control, Water Resources Department, Chennai - Orders – Issued.

**Public Works (F1) Department**

**G.O.(D).No.40** **Dated 26.02.2020**
**Vikaari, Maasi 14**
**Thiruvalluvar Aandu 2051**

**Read:**

1. G.O.(Ms) No.149, Public Works (F1) Department, dated 08.06.2018.
2. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, Letter No. AEE/T1/AE-3/32616/2019, dated 28.05.2019.
3. From the Engineer-in-Chief, (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai Letter No. AEE/T-10/Asst-2/28741/2018, dated 08.11.2019.

**ORDER:**

In the G.O first read above, orders were issued for shifting the control of four Quality Control Divisions of Water Resources Department from the respective Regional Chief Engineers to the Chief Engineer & Director, Institute for Water Studies, Hydrology & Quality Control, Water Resources Department, Chennai and formation of "Buildings Quality Control Divisions" at Chennai, Trichy and Madurai by redeploying Krishna Water Supply Project Division - 8, Chennai, the Lower Vaigai Special Project Division, Manamadurai and the Special Project Division, Madurai respectively.

2. In the letter second read above, the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai has sent a proposal for reformation of Quality Control Divisions and stated that at present 4 Quality Control Divisions in Water Resources Department and 3 Quality Control Divisions in Public Works Department are functioning effectively under the control of Chief Engineer & Director, Institute for Water Studies, Hydrology and Quality Control, Water Resources Department, Chennai. He has further stated that the jurisdiction of the Divisions, Sub Divisions & Sections of Water Resources

Department and Public Works Department are vast and they overlapping with each other. He has also stated that the Engineers of the Quality Control Divisions of both Water Resources Department and Public Works Department are facing many difficulties in attending all the construction works under progress.

3. He has further stated that only head quarters and name is proposed to be changed and hence no change in the staff strength. He has also added that the expenditure for shifting of head quarters would be met out from the office contingencies. Therefore, no additional expenditure is involved to the Government for the proposed reformation.

4. From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai has therefore, requested orders of the Government for the reformation of Quality Control Divisions by providing one sub division for every district in the state for looking after both the Public Works Department and Water Resources Department works.

5. In the letter third read above, the Engineer-in-Chief, (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Public Works Department, Chennai has also recommended the proposal of the Engineer-in-Chief, Water resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai.

6. The Government after careful examination of the proposal of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai decided to accept and to issue orders for the reformation of Quality Control Divisions under the control of Chief Engineer & Director, Institute for Water Studies, Hydrology & Quality Control, Water Resources Department, Chennai, for looking after both the Public Works Department and Water Resources Department works as detailed below:-

| SL No | Existing | | Proposed | |
|---|---|---|---|---|
| | Division | Head Quarters | Division | Head Quarters |
| 1. | Quality Control Division, Water Resources Department | Chennai | Quality Control Division | Chennai |
| 2. | Building Quality Control Division | Chennai | Quality Control Division | Villupuaram |
| 3. | Quality Control Division, Water Resources Department | Trichy | Quality Control Division | Trichy |
| 4. | Building Quality Control Division | Trichy | Quality Control Division | Salem |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | Quality Control Division, Water Resources Department | Madurai | Quality Control Division | Madurai |
| 6. | Building Quality Control Division | Madurai | Quality Control Division | Thirunelveli |
| 7. | Quality Control Division, Water Resources Department | Pollachi | Quality Control Division | Coimbatore |

7. This order issues with concurrence of Finance Department - vide its U.O.No.7225/Fin(PW-II)/20, dated 25.02.2020.

(BY ORDER OF THE GOVERNOR)

**K.MANIVASAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

## சிறப்பு வழக்கு நிதி அளித்தவர்கள்

| வ.எண். | பெயர் | பதவி | கிளை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | S. பாஸ்கரன் | இ.பொ | வேலூர் | 20,000/- |
| 2. | K. மனோகரன் | இ.பொ | திண்டுக்கல் | 10,000/- |
| 3. | A. பாலு | இ.பொ | திண்டுக்கல் | 10,000/- |
| 4. | V. இரவிச்சந்திரன் | உ.பொ | மதுரை | 10,000/- |
| 5. | R. சரவணமுருகன் | உ.பொ | விருதுநகர் | 10,000/- |
| 6. | S. முருகேசன் | உ.பொ | விருதுநகர் | 10,000/- |
| 7. | M. ரவி | இ.பொ | விருதுநகர் | 10,000/- |
| 8. | K. கோபாலகிருஷ்ணன் | இ.பொ | விருதுநகர் | 10,000/- |
| 9. | R. தியாகராஜன் | உ.பொ | திருச்சி | 10,000/- |
| 10. | V. கண்ணன் | உ.பொ | சென்னை | 10,000/- |
| 11. | U.V. சண்முகஸ்ரீ | உ.பொ | கன்னியாகுமரி | 5,000/- |
| 12. | திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை | | | 50,000/- |
| 13. | திருச்சி கிளை | | | 30,000/- |
| 14. | மதுரை கிளை | | | 20,000/- |

# இயங்கும் உலகம்

## தேனி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனி கிளையின் பொதுக்குழு கூட்டம் 06.01.2020 அன்று மாலை 6.00 மணியளவில் பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. கிளையின் உறுப்பினர்களுக்கு 2020ம் ஆண்டிற்கான டைரி மற்றும் காலண்டர் வழங்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்களுக்கு உரிய காலத்திற்கான பணப்பயன் மற்றும் முதுநிலை பெறுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வரும் பொதுச்செயலாளருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

2. அரசாணை எண்.1ன் மூலமாக பதவி பெயர் மாற்றம் பெற்ற உதவிப் பொறியாளர்கள் பெயர் விடுபடாமல் உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. மறுபணியமர்வு இளநிலைப் பொறியாளர்கள் பணிமுறிவு காலத்தினை பணிக்காலமாக மாற்றிட உரிய ஆணை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பிரிவு அலுவலகத்திற்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

5. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் இளம் பொறியாளர் பதவியை தேர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கையை தொய்வில்லாமல் எடுக்கும் மையச்சங்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தேனி கிளையின் தலைவர் பொறியாளர் K.சுந்தரப்பன், செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1950/- (ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளையின் உறுப்பினர் பொறியாளர் K.சுப்ரமணியன், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1400/- (ஆயிரத்து நானூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் உறுப்பினர் பொறியாளர் V.லிங்கம், உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.2475/- (இரண்டாயிரத்து நானுற்றி எழுபத்தைந்து மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



## பொறியாளர் R.குருசாமி, இளநிலைப் பொறியாளர்

பொறியாளர் R.குருசாமி, இளநிலைப் பொறியாளர் அவர்கள் 23.01.2020 அன்று மதுரையில் இயற்கை எய்தினார். 2011 ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகளை களைய சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த ஏழு பொறியாளர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நேரத்தில் இவருக்கு உடல்நிலை சரியில்லாத போதும் அதை மறைத்து உண்ணாவிரதம் இருந்தவர். அன்னாரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தமிழ்நாடு பொறியியல் சங்கம் பிரார்த்திக்கிறது.

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் பொறியாளர் சி.ப.சண்முகம் அவர்களின் சகோதரர் சி.ப.பொன்னுரங்கம் அவர்கள் 29.02.2020 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

Er. S. மணிகண்டன், BE.,
உதவிப் பொறியாளர் (தே/நி)
18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டம்,
தேனி.



## அரசுப் பணியிலிருந்து நன்றியுடன் விடைபெறுகிறேன்

அன்புடையீர்,

அனைவருக்கும் வணக்கம். நான் பொதுப்பணித்துறை நீர்வளத்துறையில் 36 ஆண்டுகள் பணிபுரிந்து 29.02.2020 பி.ப பணிநிறைவு பெற்று நன்றியுடன் விடைபெறுகிறேன்.

நான் ஒரு எளிமையான பொற்கொல்லர் குடும்பத்தில் மூன்றாவது குழந்தையாக 1962ல் மதுரையில் பிறந்தேன். என்னுடன் பிறந்தோர் மூன்று சகோதரிகள் மற்றும் 3 இளைய சகோதரர்கள். எங்கள் குடும்ப மூதாதையர்கள் எவரும் கல்வி கற்றிருக்கவில்லை, எல்லோரும் குலத்தொழிலையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். எனது தந்தை எங்களை படிக்க வைக்க எண்ணி வீட்டருகில் உள்ள நேரு நடுநிலைப் பள்ளியில் சேர்த்துவிட்டார். 1 முதல் 8ம் வகுப்பு வரை தமிழில் பயின்றேன். என் தந்தையின் நகைப்பட்டறைக்கு வாடிக்கையாக வரும் பாதிரியார் ஒருவர் என்னை தமிழ்நாடு பாலிடெக்னிக் தொழில்நுட்பப் பள்ளியில் 9ம் வகுப்பில் சேர வழிகாட்டி என்னை சேர்த்து விட்டார். 9ம் வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை தொழில் நுட்ப பள்ளியில் பயின்றேன். அதன்பின்னர் அதே தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் 1978 முதல் 1981 வரை சிவில் இன்ஜினியரிங் படித்து டிப்ளமோ பட்டயத்துடன் வெளிவந்தேன்.

1981மே மாதம் கடைசி பரிட்சை எழுதி வெளியே வந்த இரண்டு நாட்களிலேயே ரிசல்ட் வருவதற்கு முன்பே நெடுஞ்சாலைத்துறை வரவேற்று NMR தொழில்நுட்ப உதவியாளர் பணி வழங்கியது. 8 மாத காலம் பணியாற்றியபின் கட்டிடப் பணியின் மீது ஏற்பட்ட ஆர்வத்தால் தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி மதுரையில் 3 மாதமும் பொதுப்பணித்துறை சிறைச்சாலை கட்டிட கோட்டம், மதுரையில் இரண்டு வருடமும் 1982 முதல் 1984 மே வரை NMR தொழில் நுட்ப உதவியாளராக பணிபுரிந்தேன். இப்பணிக்காலத்தில்தான் கட்டிடக்கலை பற்றிய அடிப்படை நுணுக்கங்கள் மற்றும் துறை சார்ந்த அறிவையும் கற்றுக் கொண்டேன். இக்காலத்தில் என்னை வழிநடத்திய பொறியாளர்கள் அனைவரும் என்னுடைய தாய் தந்தையரைப் போன்றவர்கள். அதன்பின் நிரந்திர வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதால் பொதுப்பணித்துறை திட்ட ஆய்வுக் கோட்டம், மதுரையில் கிடைக்கப் பெற்ற உதவி வரைவாளர் பணியில் 1984 மே 21ல் பணியேற்றேன். BE பட்டப்படிப்பு மேற்கொள்வதை இலட்சியமாகக்கொண்டு 1983 முதல் முயற்சித்த எனக்கு அவ்வாய்ப்பு 1990ல் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் பகுதிநேர பட்டப்படிப்பு படிக்க வாய்ப்பு கிட்டியது. ஜீலை 1993ல் BE பட்டப்படிப்பு முடித்தேன். துறையில் சோந்து 17 1/2 ஆண்டுகள் உதவி

வரைவாளராகப் பணியாற்றியபின் டிசம்பர் 2001ல் பதவி உயர்வு பெற்று இளநிலை வரைதொழில் அலுவலராக விருதுநகர் இருக்கண்குடி நீர்த்தேக்க திட்ட கோட்டத்தைச் சார்ந்த காரியாப்பட்டி உபகோட்டத்தில் பணியேற்றேன். அதன்பின் பெரியாறு மேம்பாட்டுக்கோட்டம் எண்7, மதுரைக்கு மாறுதல் பெற்று பிப்ரவரி 2006 முதல் ஜனவரி 2007 வரை இளநிலை வரை தொழில் அலுவலராக பணிமேற்கொண்டேன். அதன் பிறகு உதவிப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று ஜனவரி 2007 முதல் நான் ஏற்கனவே பணியாற்றிக் கொண்டிருந்த பெரியாறு மேம்பாட்டுக் கோட்டம் எண் 7, மதுரையிலேயே உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்தேன். அதன்பின் நான் பணியாற்றிய பெரியாறு மேம்பாட்டு கோட்டம் எண் 7 மதுரை பணிப்பெயர்ச்சி அடிப்படையில் 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டமாக மாற்றம் செய்யப்பட்டு 01.02.2016 முற்பகல் முதல் தேனியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டது. 01.02.2016 முற்பகல் முதல் பிப்ரவரி 2020 வரை 18ம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு கோட்டம், தேனியில் பணியாற்றி 29.02.2020ல் பணிநிறைவு பெறுகிறேன் என்பதை மிக்க மனநிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பணியாற்றிய இந்த 39 ஆண்டுகால பணிக்காலத்தில் என்னுடைய சக பணியாளர்களிடமோ, சக பொறியாளர்களிடமோ, உயர்நிலை அலுவலர்களிடமோ, சார்நிலை அலுவலர்களிடமோ எவருடனும் பிணக்கோ, சண்டையோ வந்ததில்லை எல்லோருடனும் நட்புடனும், பாசத்துடனும், மரியாதையுடனேயே கடந்து வந்திருக்கிறேன். இதையே இறைவன் எனக்கருளிய அருட்கொடையாக கருதுகிறேன். இப்பணிக்காலத்தில் என்னுடன் பணிபுரிந்து என்னை வழிநடத்திய மூத்த பொறியாளர்கள், சக பொறியாளர்கள் வரைவுப் பிரிவு அலுவலர்கள் கணக்குப் பிரிவு அலுவலர்கள் கடைநிலை அலுவலர்கள் அனைவரையும் இத்தருணத்தில் நினைவு கூர்ந்து நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்,என்னை வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையர்க்கும் உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எனது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

எனது குடும்ப விபரம் எனக்கு 1987 ஜூன் மாதத்தில் திருமணம் நடைபெற்றது. 1988ல் ஒரு மகனும், 1993ல் ஒரு மகளும் பிறந்தார்கள், இருவரும் BE Civil Engineering முடித்துள்ளனர். மகளுக்கு 2019ல் திருமணம் முடிவுற்றது. கடவுள் எனக்கு நல்ல டாக்டர் மாப்பிள்ளையையும், நல்ல சம்மந்தியையும் அருளியுள்ளார். எனது மகனுக்கு தற்போது வரன் பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னுடைய அனைத்து வெற்றிக்குப் பின்னும் எனது மனைவியே உடனிருந்து வந்திருக்கிறார். அதற்கு என்றென்றும் நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன். மேலும் எனது நண்பர்கள் வட்டமும் படித்ததிலிருந்து இன்று வரை எல்லா வழிகளிலும் எனக்கு உறுதுணையாகவும் நல்ல வழிகாட்டியாகவும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் நான் என்றென்றும் ஆண்டவனுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்
வளர்க பொறியாளர்கள் ஒற்றுமை

## 15.02.2020 அன்று சென்னையில் நடந்த தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்களின் முத்துவிழா மற்றும் மலர் வெளியீட்டு விழா நிகழ்வுகள்











மார்ச் 2020
பொறியியல் கதிர்

# 15.02.2020 அன்று சென்னையில் நடந்த தியாகச்செம்மல் சி.ப.சண்முகம் அவர்களின் முத்துவிழா மற்றும் மலர் வெளியீட்டு விழா நிகழ்வுகள்













மார்ச் 2020
பொறியியல் கதிர்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் அ.விசுவாமித்திரன், திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் ஏ.அடைக்கண், கன்னியாகுமரி கிளையின் பொருளாளர் பொறியாளர் எஸ்.ஜெயக்குமார், தேனி கிளையின் உறுப்பினர் பொறியாளர் எஸ்.மணிகண்டன் ஆகியோர் பணிஓய்வை முன்னிட்டு கிளைப் பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.









Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**MARCH 2020**

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் பொறியாளர் என்.எஸ். கௌரிசங்கர் உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on**
**14.03.2020**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,